# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குழித்துறை நகராட்சி

**குழித்துறை நகர் மன்றத்தின் 09–03–2018–ம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்**

பொருள் எண். 1

குழித்துறை நகராட்சி பகுதியில் துப்புரவு பணிகளுக்கு அரசாணை (நிலை) எண்.101, நாள் 30–04–1997 அளவுகோலின்படி கூடுதலாக தேவைப்படும் பணியாளர்களை தனியார் வேலைவாய்ப்பு மூலமாக 44 துப்புரவு பணியாளர்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மூலம் நிர்ணயித்துள்ள தினகூலியுடன் ESI, EPF, LIC Service Tax Uniform மற்றும் Safety Equipments ஆகிய செலவினங்களையும் சேர்த்து கூலி நிர்ணயம் செய்து நகராட்சி நிதியிலிருந்து வழங்கிட நகராட்சி நிர்வாக ஆணையரகத்திலிருந்து அனுமதி ஆணை பெறப்பட்டுள்ளது. (K.Dis.No.30118/P3/2017, dated : 20-12-2017)

தற்போது சுகாதார அலுவலரின் 5–1–2018–ம் தேதிய அறிக்கையில் மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தனியார் வேலைவாய்ப்பு அலுவலர் முடிவு செய்யப்பட வேண்டுமென்பதாலும் நகராட்சி நிதிநிலமையை கருத்தில் கொண்டு முதல் முறையாக துப்புரவுப் பணி, தனியார் வசம் ஒப்படைக்கப்படுவதாலும் அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடத்தை விட குறைவாகவும் முதல் கட்டமாக 30 துப்புரவு பணியாளர்களை மட்டும் வைத்து 10 வார்டுகள் துப்புரவுப் பணி செய்திட ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:– நகராட்சி நிதி நிலைமையினை கருத்தில் கொண்டு முதல் கட்டமாக 10 வார்டுகள் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் துப்புரவு பணி செய்தி மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3066**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 2

குழித்துறை நகர புல எண்.D10/57–ல் திருமதி. ரபீக்காபீவி என்பவர் கட்டிடம் கட்டியது தொடர்பாக திரு. ஐயூப்கான் என்பவரால் தொடரப்பட்ட வழக்கின் WP (MD) No.6946/2017 மீது Contemopt Case No.2144 of 2017 தொடரப்பட்டுள்ளது. நகராட்சி சார்பில் மதுரை உயர்நீதி மன்றத்தின் ஆஜராகி வழக்காடியமைக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/– கேட்டுள்ளார். எனவே மேற்படி கட்டணம் திரு. வாமனன் வழக்கறிஞருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3067**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 3</u>

குழித்துறை நகர புல எண்.D9/74–ல் சாலை புறம்போக்கு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது தொடர்பாக திரு. நூர்ஜஹான் மற்றும் 8 பேர் தனித்தனியாக மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் WP (MD) No.1294, 1295, 1296, 1297, 1298, 1299, 1300, 1301 & 1302 of 2018 ஆக வழக்கு பதிவு செய்துள்ளார்கள். மேற்படி 9 வழக்களுக்கும் நகராட்சி சார்பில் 23–02–2018 அன்று நீதிமன்றத்தில் வழக்காடி வழக்கு தள்ளுபடியாயிற்று. எனவே வழக்கறிஞரூ கட்டணமாக வழக்கு ஒன்றிற்கு ரூ.10,000/– வீதம் 9 வழக்குகளுக்கும் ரூ.90,000/– வழக்கறிஞர் திரு. வாமனன் கேட்டுள்ளார். எனவே மேற்படி வழக்கறிஞர் கட்டணம் ரூ.90,000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.
FNo.1841/2017/TPI.

**நகர் மன்றத்தீர்மான எண். 3068**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 4</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்கள் வரிசை எண்.1 முதல் 7 முடிய உள்ள இனங்களுக்கு 1–4–2018 முதல் 31–3–2021 முடிய மூன்றாண்டு காலத்திற்கு ஏல வைப்புத் தொகை மற்றும் வங்கி உத்திரவாத சான்று ஏற்கனவே மன்றத் தீர்மானம் எண்.3006, நாள் 27–11–2017–ல் தீர்மானத்தின் அடிப்படையில் ஒருமுறைக்கு பலமுறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வைப்புத் தொகை மற்றும் வங்கி உத்திரவாத சான்று கூடுதலாக இருப்பதை முன்னிட்டு பொது மக்கள் பொது ஏலத்தில் கலந்து கொள்ள இயலாத நிலை எற்பட்டுள்ளதன் காரணத்தினால் திருத்திய வைப்புத்தொகை மற்றும் வங்கி உத்திரவாத சான்றினை குறைவு செய்து கீழ்கண்ட இனங்களுக்கு திருத்திய மன்ற தீர்மானம் நிறைவேற்றும் பொருட்டு மன்ற அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண் | உரிமங்கள் விபரம் | ஏற்கனவே உள்ள ஏலத்தொகை ரூபாய் | ஏற்கனவே உள்ள வங்கி உத்திரவாத சான்று | திருத்திய வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளின் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 3,00,000 | 10,00,000 | 2,00,000 |
| 2 | மார்த்தாண்டம் பழைய தியேட்டர் சந்திப்பிலுள்ள கட்டண கழிப்பறை மற்றும் கல்பாலத்தடி கட்டண கழிப்பறை | 50,000 | 5,00,000 | 25,000 |
| 3 | மார்த்தாண்டம் மினிபார உந்து நிலையத்தின் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 50,000 | 4,00,000 | 50,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | குழித்துறை மாலைச்சந்தை மற்றும் குழித்துறை அம்மன்கோவில் பக்கம் உள்ள பொருட்கள் விற்பனை செய்யும் உரிமம் | 50,000 | 1,00,000 | 25,000 |
| 5 | மார்த்தாண்டம் லாறி பேட்டை கழிப்பறை | 50,000 | 1,00,000 | 30,000 |
| 6 | இருசக்கர வாகனம் (பேருந்து நிலையம்) | 1,00,000 | 2,00,000 | 50,000 |
| 7 | குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வி.எல்.சி. கலையரங்கம் | 3,00,000 | 5,00,000 | 2,00,000 |

அ.கு. :– மன்றம் பார்வையிட்டு அனுமதி வழங்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3069**

**வரிசை எண்.1 முதல் 7 வரை குத்தகை இனங்கள் வைப்புத் தொகை மற்றும் வங்கி உறுதி சான்று திருத்திய வைப்புத் தொகையினை மற்றும் வங்கி உத்திரவாத சான்றுக்கு பதிலாக சால்வேன்சி சான்று கோப்புடன் இணைக்க மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.5

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் குப்பைகள் நிரப்பி மேற்கொண்டு குப்பைகளை கொட்ட இடமில்லாததால் Hitchai இயந்திரம் மூலம் குப்பைகளை அகற்றவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.3,00,000/–க்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு.:– பொதுசுகாதார பணியின் அவசரம் அவசியம் கருதி மேற்கொண்டு பணியினை உடனடியாக செய்திட அதற்கான உத்தேச செலவினம் ரூ.3,00,000/– நகர்மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3070**
**அனுமதிக்கப்பட்டது.**

## குழித்துறை நகர் மன்றத்தின் 28–03–2018–ம் புதன்கிழமை நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

பொருள் எண். 1

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்கள், மார்த்தாண்டம் பேருந்து நிலைய காலியாக இருக்கும் கடைகள் மற்றும் பி.பி.முனிசாமி வணிகவளாகத்தில் காலியாக இருக்கும் கடைகளுக்கு 23–03–2018–ல் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றம் பார்வையிட்டு மன்றத்தீர்மானம் நிறைவேற்ற மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | குத்தகை இனங்கள் | ஏலத்தாரர் பெயர் | ஏலக்கேள்வி | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| 1 | மார்த்தாண்டம் மினிபார உந்து நிலையம் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமம் | 1) J. பிறேம்குமார்<br>2) ஷாஜிகுமார் | –<br>– | 22,000<br>24,100 |
| 2 | வி.எல்.சி.கலையரங்கம் குத்தகை உரிமம் | 1) M. வினில்ராஜ்<br>2) M. கிறிஸ்துராஜ் | –<br>– | 2,60,000<br>3,00,150 |
| 3 | மார்த்தாண்டம் பேருந்து நிலைய கடை எண்.B12 | 1) D. சுனிதா<br>2) R. ஜார்ஜ் | –<br>– | 10,510<br>9,000 |

1) வரிசை எண்.1–க்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதில் திரு.J. பிறேம்குமார் என்பவர் வைப்புத் தொகை செலுத்தாமல் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.22,000/–க்கு கேட்டுள்ளார். மேலும் திரு. ஷாஜிகுமார் என்பவர் உரிய வைப்புத் தொகை செலுத்தப்பட்டு ரூ.24,100/–க்கு உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கேட்டுள்ளார். ஏலத்தில் யாவரும் கலந்து கொள்ளவில்லை. உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கேட்டுள்ள திரு. ஷாஜிகுமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் முடிவு செய்யலாம்.

2) வரிசை எண்.2–க்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதில் திரு. M. வினில்ராஜ் என்பவர் வைப்புத் தொகை செலுத்தாமல் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.2,60,000/–க்கு கேட்டுள்ளார். மேலும் M. கிறிஸ்துராஜ் என்பவர் உரிய வைப்புத் தொகை செலுத்தப்பட்டு ரூ.3,00,510/–க்கு உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கேட்டுள்ளார். ஏலத்தில் யாவரும் கலந்து கொள்ளவில்லை. உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கேட்டுள்ள M. கிறிஸ்துராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் முடிவு செய்யலாம்.

3) வரிசை எண்.3–க்கு இரண்டு நபர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். அதில் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருமதி.டி. சுனிதா என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் முடிவு செய்யலாம்.

<u>அ.கு.:–</u>

மேலும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிபோகாத குத்தகை இனங்களான

1) பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளின் நுழைவு கட்டணம்

2) மார்த்தாண்டம் பழைய தியேட்டர் கழிப்பறை மற்றும் கல்பாலத்தடி கழிப்பறை

3) குழித்துறை மாலை சந்தை

4) லாறிபேட்டை கட்டண கழிப்பறை

5) இருசக்கர வாகனம்

6) பேருந்து நிலைய கடைகள், பி.பி.முனிசாமி கடைகள் ஆகிய இனங்களுக்கு மறுஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதிக்கு.

**நகர்மன்றத் தீர்மான எண்.3071**

**வரிசை எண்.1, 2, 3–க்கு உயர்ந்த ஒப்பந்தப்புள்ளிக்கு உரிமம் வழங்கலாம். அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 2</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கலவை உரக்கிடங்கில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள Windrow Plat form-ல் உரம் தயாரிக்கும் கூடம் ரூ.35.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 1–2–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி முடிவுகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

1) திரு.D. ஜஸ்டின்குமார் குழித்துறை – 0.13% மதிப்பீட்டை விட குறைவு

2) திரு. ஜெயசிங் நாகர்கோவில் – 0.002% மதிப்பீட்டை விட அதிகம்

அ.கு.:– வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் திரு.D. ஜஸ்டின்குமார் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3072**

**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 3</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பி.பி.முனிசாமி வணிகவளாக கடை எண்.F7–க்கு தொடர்ந்து கடை நடத்த இயலாது என தெரிவித்து மனுதாரர் திரு.எஸ். முகம்மது இஸ்மாயில் என்பவர் கடையின் சாவியினை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது. அன்னார் 2017–2018–ம் வருடத்திற்கு குத்தகை தொகை மற்றும் இதர வரியினங்கள் செலுத்தவில்லை. ஆகவே அன்னாருடைய வைப்புத் தொகையில் 2017–2018–ம் வருடத்திற்கான தொகையினை ஈடு

செய்யவும் மின் கட்டணத்திற்கான வைப்புத் தொகை ரூ.5000/–ம் பிடித்தம் செய்து போக மீதி தொகையை திருப்பி வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு.:– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3073**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 4

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களுக்கு 28–03–2018–ல் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வரிசை எண் | குத்தகை இனங்கள் | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாய் |
|---|---|---|---|
| 1 | மார்த்தாண்டம் மினி லாறிப்பேட்டை கழிப்பறை | 1) திரு.சி. செல்வமணி<br>2) திரு.சி. ராஜாமணி | 14000<br>11000 |
| 2 | குழித்துறை மாலைச்சந்தை மற்றும் அம்மன்கோவில் பக்கம் உள்ள சந்தை | 1) திரு.சி. ராஜாமணி<br>2) திரு.சி. செல்வமணி | 14000<br>10000 |
| 3 | பழைய தியேட்டர் சந்திப்பு கழிப்பறை மற்றும் கல்பாலத்தடி கழிப்பறை | 1) திரு.சி. ராஜாமணி<br>2) திரு.சி. செல்வமணி | 39000<br>30000 |

வரிசை எண்.1–ல் மினி லாறிபேட்டைக்கு இருநபர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளனார். அதில் வரிசை எண்.2–ல் உள்ள நபர் வைப்புத் தொகை செலுத்தாமல் ஒப்பந்தப்புள்ளி தொகை கோரியுள்ளார். ஆகவே உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சி. செல்வமணி என்பவரின் ஒப்பந்தப்புள்ளித் தொகையினை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

வரிசை எண்.2 குழித்துறை மாலைச்சந்தை மற்றும் அம்மன்கோவில் சந்தைக்கு இருநபர்கள் ஒப்பந்தப்புள்ளி கோரிள்ளனார். அதில் வரிசை எண்.2–ல் உள்ள நபர் வைப்புத் தொகை செலுத்தாமல் ஒப்பந்தப்புள்ளி தொகை மட்டும் கோரியுள்ளார். அதில் திரு.சி. ராஜாமணி என்பவர் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

வரிசை எண்.3 பழைய தியேட்டர் கழிப்பறை மற்றும் கல்பாலத்தடி கழிப்பறைக்கு இருநபர்கள் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளனார். அதில் வரிசை எண்.2–ல் உள்ள நபர் வைப்புத் தொகை செலுத்தாமல் ஒப்பந்தப்புள்ளி தொகை மட்டும் கோரியுள்ளார். உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை கொடுத்துள்ள திரு.சி. ராஜாமணி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

மேலும் இன்னும் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி போகாத குத்தகை இனங்களுக்கு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர காலஅவகாசம் இல்லாததாலும் ஒருமுறைக்கு ஐந்துமுறை மறுஏலம்/ மறுஒப்பந்தப்புள்ளி கோரியும் எவரும் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரததால் 1–4–2018 முதல் துறை மூலம் வசூல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:— இதுநாள் வரையிலும் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி போகாத குத்தகை இனங்களுக்கு இன்னும் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர காலஅவகாசம் இல்லாததாலும் ஒருமுறைக்கு ஐந்துமுறை மறுஏலம்/ மறுஒப்பந்தப்புள்ளி கோரியும் எவரும் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கலந்துகொள்ளததால் 1—4—2018 முதல் துறை மூலம் வசூல் செய்ய செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3074**

**வரிசை எண்.1,2,3—க்கு உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி உரிமம் வழங்கலாம். அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 5

குழித்துறை நகராட்சியில் கீழ்காணும் திட்டப்பணிகள் மேற்கொள்ள 20—03—2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் மற்றும் இதர பகுதிகளில் பழுதடைந்துள்ள சுலீஸ் வால்வுகள் பழுது நீக்கம் செய்தல் | 0.85 | 1) சி. சுரேஷ்<br>2) எ. சத்தியநேசன் | 0.06% குறைவு<br>1.26% அதிகம் |
| 2 | வார்டு 2, 12—ல் நெடும்போக்கி கோவில் தெரு பனங்கூடல் விளை பகுதியில் Mini power Pump பழுது மற்றும் புயல் காரணமாக சேதமடைந்த சுற்று சுவர் சரி செய்தல் | 0.70 | 1) எ. ஆன்றணி<br>2) பி. ஜெயச்சந்திரன் | 0.03% குறைவு<br>0.41% அதிகம் |
| 3 | வார்டு 3—ல் தாலுகா அலுவலகம் மற்றும் நீதி மன்றம் சந்திப்பு பழுதியிலுள்ள கிணறுகள் தூர்வாரி Gril cover weldnesh அமைத்தல் | 0.30 | 1) பி. ஜெயச்சந்திரன் 2) பி. ஜெயப்பிரகாஷ் | 0.16% குறைவு<br>0.04% அதிகம் |

அ.கு.:— வரிசை எண்.1 முதல் 3 வரை மதிப்பீட்டை விட குறைவான விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3075**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 6

குழித்துறை நகராட்சியில் கீழ்காணும் திட்டப்பணிகள் மேற்கொள்ள 22–03–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி முடிவுகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பம்மம் பகுதியிலுள்ள 5" பி.வி.சி.குழாய் பதித்து பம்மம் OHT-க்கு நீரேற்றம் செய்தல் | 1.20 | 1) சி. சுரேஷ்<br>2) எ. சத்தியநேசன் | 0.19% குறைவு<br>0.70% அதிகம் |
| 2 | குடிநீர் சுத்திகரிப்பிற்கு தேவையான Bleaching Liquid மற்றும் 100 lr கொள்ளளவு கொண்ட Water Storage வினியோகம் செய்தல் | 6.00 | 1) M/s. Ananda Enter prises, Madurai<br>2) M/s. Rowkal & Co Madurai | 5.83% அதிகம்<br>0.09% குறைவு |

அ.கு.:– வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 மற்றும் 2–ற்கு மதிப்பீட்டை விட குறைவான விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3076**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 7

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான தெருமின்விளக்குகளை பராமரிப்பு செய்வதற்கு தேவையான மின் உபகரணங்கள் வினியோகம் செய்வதற்கு 21–03–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | M/S. Revathi Traders, Nagercoil | 4.90 | மதிப்பீட்டை விட 0.08% குறைவு |
| 2 | M/S. Velmurugan Traders, Nagercoil | | மதிப்பீட்டை விட 2.14% அதிகம் |

<u>அ.கு.:</u>—வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/S. Revathi Traders நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3077**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 8</u>

குழித்துறை நகராட்சியில் கீழ்காணும் திட்டப்பணிகள் மேற்கொள்ள 21—03—2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு 17 கோடியாவிளை சாலை பேவர் பிளாக் அமைத்தல் | 4.70 | 1) திரு.பி. தேவதாஸ்<br>2) திரு.சி. சுரேஷ் | 0.14% குறைவு<br>11.27% அதிகம் |

<u>அ.கு.:</u>— வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி. தேவதாஸ் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3078**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 9</u>

தமிழக அரசின் ஓராண்டு சாதனைகளை பொதுமக்கள் அறியும் வண்ணம் குழித்துறை நகராட்சியின் வளர்ச்சித் திட்டப்பணிகள் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. மேலும் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா சிறப்பு மலரில் குழித்துறை நகராட்சியின் வளர்ச்சித் திட்டங்கள் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி விளம்பரங்கள் செய்தமைக்கும் கீழ்கண்ட பத்திரிகைகளுக்கு விளம்பரக் கட்டணம் வழங்கப்பட வேண்டியுள்ளது.

1) தினகரன் நாளிதழ் — ரூ. 9240
2) தினத்தந்தி நாளிதழ் — ரூ. 9841
3) மாலை மலர் — ரூ. 8000

மேற்படி விளம்பரக் கட்டணங்கள் சம்பந்தப்பட்ட பத்திரிகைகளுக்கு வழங்க மன்றம் அனுமதிக்கு.
அ.கு. :— மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3079**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.10</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் நகராட்சி 21 வார்டுகளிலுள்ள குப்பை குழங்களை கொண்டு நிரப்பியுள்ளதால் மேலும் குப்பைகளை கொட்ட இடவசதியில்லாததாலும் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று Hitachi இயந்திரம் மூலம் குப்பைகளை அகற்ற 16–3–2018–ல் விலைப்புள்ளி கோரியத்தில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் அடிப்படையில் குறைந்த விலைப்புள்ளிக்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் பார்க்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் | Hitachi இயந்திரம் மணிக்கூர் ஒன்றுக்கு தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | ஜெஸ்டின் குமார் | 900 |
| 2 | BDS Earth Movers | 975 |
| 3 | S.S.S. Contract works | 950 |

அ.கு.:– வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்தவிலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.டி. ஜெஸ்டின்குமார் என்பவரின் விலைப்புள்ளியினை ஏற்று பொதுசுகாதார அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3080**
**அனுமதிக்கப்பட்டது.**

ஒப்பம்/–
கே. சௌந்தரம்,
ஆணையாளர் மற்றும்
தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.